இதில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக்கிறார்கள்—

தலைவர் : உணவு-வருவாய்த் துறை அமைச்சர்.

உறுப்பினர்கள் : திருவாளர்கள் எஸ். அழகர்சாமி, திரு. துரை கோவிந்தராசன், திரு. கா. காளிமுத்து, திரு. எம். எ. லத்தீப், திரு. பி. எஸ். மணியன், திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. வி. பழனிவேலு, திரு. ஆ. பரந்தாமன், திரு. எ. ஆர். பெருமாள், திரு. பி. பொன் சொக்கலிங்கம், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. அ. ப. சண்முகசுந்தரம், திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம், திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. இ. எஸ். தியாகராசன், திரு. அ. வெள்ளைத்துரை, திரு. எம். ஆறுமுகசாமி, எம். எல். ஸி., திரு. எஸ். ஜெயராம ரெட்டியார், திரு. மன்னை பி. நாராயணசுவாமி, திரு. டி. கே. பொன்னுவேலு, திரு. கே. ராஜாராம், திரு. எம். சங்கரலிங்கம், திரு. சா. கணேசன், திரு. என். சுந்தரேச தேவர், எம். எல். ஸி.

THIRU K. T. K. THANGAMANI : We are grateful to the Hon Minister for the valuable information. My question is directed to the High Power Committee on Land Reforms. It is constituted under the leadership of the Hon. Chief Minister. I am also a member of the committee and I wanted to know when this particular committee is going to meet. At the same time we are grateful to the Hon. Minister for Food for giving the information about the Exemption Committee which is going to meet on 18th instant.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிற கமிட்டி பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

சிறைகளில் உற்பத்தியாகும் பொருள்கள்

* 469 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது தமிழகத்தில் உள்ள சிறைக் கைதிகளைக் கொண்டு அரசு என்னென்ன பொருட்களை உற்பத்தி செய்கின்றது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சபைமுன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Life term prisoners

* 470. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a considerable number of life term prisoners who have completed 15 years are still in jail; and

(*b*) if so, the steps taken for getting them released?

@ 212-216-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) பதினைந்தாண்டு சிறை முடித்த பின்னரும் சிறைத் தண்டனையை தொடர்ந்து அனுபவித்து வரும் கைதிகளின் எண்ணிக்கை மூன்று மட்டுமே.

(இ) ஆயுள் சிறைவாசம் என்பது கால நிர்ணயமில்லாத தண்டனையாகும். ஒவ்வொரு கைதியும் தான் ஈட்டிய தண்டனைக் குறைப்புக் காலத்தையும் சேர்த்து இருபதாண்டு தண்டனைக் காலத்தின் மூன்றில் இரண்டு பகுதிக்கு ஈடான தண்டனைக் காலத்தை கழித்த பின்னர், அறிவுரைக் கழகத்தின் பரிந்துரையினை கருத்தில் கொண்டு அந்தக் கைதியை முன் கூட்டி விடுதலை செய்வதா வேண்டாமா என்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்கின்றது. மேலே குறிப்பிட்டுள்ள மூன்று கைதிகளின் கோப்புகளை கடந்த ஏப்ரல் மாதத்தில் அரசு மறு பரிசீலனை செய்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் அதனை மறு பரிசீலனை செய்யலாம் என்று தீர்மானித்தது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: We are not able to hear the Hon. Minister at all. We are not able to hear what he reads.

MR. DEPUTY SPEAKER: That will be taken note of.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் இருப்பவர்கள் குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று சென்ற தொடரில் சொன்னார்கள். இப்போது பதினைந்து ஆண்டுகளுக்கு மேலே இன்னும் மூன்று பேர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதில் காலதாமதம் இல்லாத முறையில் அதைப் பரிசீலனை செய்து, ஒத்திப்போடாமல் அவர்களைச் சீக்கிரமாக விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்று பொதுவாக ஒரு கருத்தை நாம் பின்பற்றிவருகிறோம். இந்த மூன்று கைதிகள் பற்றி நாம் அறிக்கை கேட்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பரிந்துரை வந்தபின் முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். தேவராசன்: ஆயுள்தண்டனை அடைந்த கைதிகள் விடுதலையாகி வெளியே வந்த பிறகு அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தக் கைதிகளுக்கு ஒரு சங்கம் அமைத்து அந்தச் சங்கம் மூலமாக அந்தக் கைதிகளுக்கு என்ன புனர்வாழ்வு அளிக்கமுடியும் என்பதைப் பற்றி டிஸ்சார்ஜ்ட் பிரிஸனர்ஸ் சொஸைட்டி மூலம் கவனிக்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி: சமுதாயத்தில் கொலை போன்ற குற்றங்கள் செய்தவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னால் ஆயுள் தண்டனை என்றால் 14 ஆண்டுகள் தான்

என்று வறையறுத்தார்கள். அப்போது மனிதனின் சராசரி வயது தமிழ்நாட்டில் 21 ஆக இருந்தது. இப்போது 51 ஆக சராசரி வயது உயர்ந்திருப்பதன் காரணமாக இந்த ஆயுள் தண்டனை என்பதை குறைத்து 20 வருடங்களாவது உயர்த்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆயுள்தண்டனை என்பது சட்டப்படி ஆயுள் முழுவதும் சிறையில் இருக்கவேண்டும் என்பது தான், பின்னால் ஒரு விதி விலக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அது இருபது ஆண்டுகள் என்று விலக்கம் கொடுக்கப்படடிருக்கிறது. இருபது ஆண்டுகள் என்று வரும்போது அந்தக் கைதிக்கு சிறைச்சாலையில் எவ்வளவு நாட்கள் ரெமிஷன் கொடுக்கப் படுகிறது என்பதைப் பார்த்து அதைக் கழித்துப் பார்க்கும்போது பெரும்பாலும் 10 வருடங்களிலிருந்து 15 வருடத்திற்குள்ளாக விடுதலை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சிறையில் இருக்கக்கூடிய கைதிகளை ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டிலும் ப்ரஸ்ஸிலும் வேலையில் ஈடுபடுத்துகிறார்கள். அவர்களுக்கு அதற்குக் கொடுக்கக்கூடிய கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. சரியான கூலி கொடுத்தால்தான் அவர்கள் வெளியே வந்து புனர்வாழ்வு வாழ்வதற்கு அந்தத் தொகை பயன்படும். ஆகவே அவர்களுக்கு நியாயமான கூலி கொடுக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் பயன்படுத்துவதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி எந்த சிறையில் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. சிறையில் ஒரு ப்ரஸ் வைத்திருக்கிறோம். அங்கு அவர்களுக்கு வேலை கொடுக்கப்படு கிறது. வெளியே அனுப்பப்படுவதில்லை.

திரு. கே. எ. வகாப் : ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய யுத்த நிலையில் போர்க் களத்தில் போராடத் தயாராக இருப்பார்களானால் அவர்கள் களத்திற்கு அனுப்பப்படுவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி யாரும் முன்வருவார் களேயானால் பரிசீலிக்கப்படும்.

திரு. சொ. காவேரிமணியம்: பொதுவாக ஆயுள் தண்டனை பெற்றவர்கள் சந்தர்ப்ப, சூழ்நிலை காரணமாகத் தவறு செய்தவர் களாக இருக்கிறார்கள். குறைந்த அளவு தண்டனை பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ரெமிஷன் ஆஃப் சென்டென்ஸ் பற்றி எப்போது கன்சிடர் பண்ணுகிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆயுள் தண்டனையில் மூன்றில் இரண்டு பங்கை அனுபவித்த பிறகு அட்வைசரி போர்டுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் பரிசீலித்து அரசாங்கத்திற்கு அனுப்பு கிறார்கள்.